 

**வீராச்சல ஶ்ரீராமசந்த்ர ஸுப்ரபாதம்**
**(5)**

ஶ்ரீமதே ஶ்ரீ வராஹ மஹா தேசிகாய நமஹ
ஶ்ரீமதே ரங்க ராமானுஜ மஹாதேசிகாய நமஹ
ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்
திருவடிகளே சரணம் 🙏

**ஶ்ரீரங்கம் ஶ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் ஶ்ரீ ரங்க ராமானுஜ மஹாதேசிகன்** பூர்வாச்ரமத்தில் அருளிய பல ஸ்தோத்திர படைப்புகளில் சிலவற்றை **ஸ்தோத்ராவளீ** என்ற தொகுப்பாக

வந்தது. அதில் இருந்து வீராச்சலத்தில் இருக்கும் சக்கரவர்த்தி திருமகன் **ஸ்ரீராமனுக்கு பாடி அருளிய ஸுப்ரபாதமும்** ஒன்று . இது பலஸ்ருதியுடன் சேர்த்து 30 ஸ்தோத்திரங்கள் கொண்டது. நம் ஆசார்ய வள்ளலின் இப்படைப்பை அர்த்தத்துடன் ஒவ்வொன்றாக சேவித்து அனுக்கிரஹம் பெறுவோம்🙏
இன்றைய தினம் 5வது ஸ்லோகம் சேவிக்கலாம் 🙏

**ஸ்லோகம் 5👇**
**ஷ்ருத்யந்தஸித்³த⁴ ஸுபகௌ சுப⁴மூர்த்திமந்தௌ**
**லீலாக்³ருஹீதவபூஷௌ லலிதாம்க்⁴ரிபத்³மௌl**
**ஆத்³யந்தசூந்யநிகி²லாக³ம த³ம்பதீ வாம்**
**த்³ராக³த்³ய ஹ்ருத்யசுப⁴தம் ஸுக² ஸுப்ரபாதம் ll5ll**

**அர்த்தம் 👇**
தம்பதியான நீங்கள் இருவரும் வேதாந்தங்களில் அதாவது உபநிஷத்துக்களில் விளக்கப்பட்ட பெருமையை உடையவர்கள். மிகவும் மங்களகரமான சுபாஸ்ரயமான(அர்ச்சை) திருமேனியை உடையவர்கள். தங்கள் ஸங்கல்பத்தாலே தங்கள் லீலைக்காக தமக்கென்று திருமேனி ஒன்றை ஏற்றுக் கொண்டு இருப்பவர்கள். அழகிய திருவடியுடையவர்கள். முதலும் முடிவுமில்லாத வேத வாக்கியங்கள் அனைத்தும் உங்கள் பெருமையைத்தான் கூறுகின்றன. உங்களுக்கு திருவுள்ளம் உகக்கும்படி மங்களகரமான ஸுகமான ஸுப்ரபாதம் ஏற்படுவதாக.

பதிவிறக்கம்
அடியேன் தாசன் 🙏
சித்ரா அமுதன் 🙏
(Vadodara) 🙏